අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/09/23/01/1
ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.
දිනය / திகதி / Date 2021-03-

<u>பாடசாலை நூலக புத்தகங்களை அனுமதித்தல் - மதிப்பாய்வு கட்டணம்</u>

கல்வி வெளியீட்டு ஆலோசனை சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக உங்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அச்சுப்புத்தகமொன்றாயின் அதன் 03 பிரதிகள் வீதமும் கையெழுத்துப் பிரதியாயின் அதன் 02 பிரதிகள் வீதமும் சமர்ப்பித்தல் வேண்டும். இதற்காக அறவிடப்படும் மதிப்பாய்வுக்கட்டணம் கீழ்வருமாறு

| | **புத்தகத்தின் வகை** | **புத்தகத்தின் அளவு** | **முதல் 100 பக்கங்களுக்காக** | **100 பக்கங்களுக்கு மேற்படுகின்ற பக்கங்களுக்கு** |
|---|---|---|---|---|
| 1. | அச்சிடப்பட்ட சாதாரண புத்தகங்கள் | டிமை 1/8 அல்லது அதை விட விசாலமான (8.5x5.5 அங்குலம் அல்லது அதை விட விசாலமான) | ஒரு புத்தகம் 525/- | ரூபா.4.50 வீதம் |
| 2. | அச்சிடப்பட்ட சாதாரண புத்தகங்கள் | டிமை 1/8 விட குறைந்த (8.5x5.5 அங்குலத்தை விடக் குறைவான) | ஒரு புத்தகம் 450/- | ரூபா.3.75 வீதம் |
| 3. | கையெழுத்துப் பிரதிகள் | A4 அளவை விட கூடாதிருத்தல் வேண்டும் | ஒரு புத்தகம் 375/- | ரூபா.2.00 வீதம் |
| 4. | சிறுவர் புத்தகங்கள் | கிரவுண் 1/4 அல்லது அதை விட விசாலமான (9.5x7 அங்குலம் அல்லது அதை விடப் பெரிய) | ஒரு புத்தகம் 210/- | ரூபா.2.00 வீதம் |
| 5. | சிறுவர் புத்தகங்கள் | கிரவுண் 1/4 விட குறைவான (9.5x7 அங்குலத்தை விடக் குறைவான) | ஒரு புத்தகம் 180/- | ரூபா.1.00 வீதம் |
| 6. | சிறுவர் கையெழுத்து பிரதிகள் | A4 அளவை விட பெரிதாக இருத்தல் வேண்டும் | ஒரு புத்தகம் 180/- | ரூபா. 1.50 வீதம் |

இந்த மதிப்பாய்வுக்கட்டணம் செலுத்துதல் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு காசுக்கட்டளையொன்றின் (வழங்கும் அலுவலகம்-இசுருபாய) மூலம் அல்லது கல்வி அமைச்சில் நேரடியாக பணமாக செலுத்த முடியும் என்பதை தயவுடன் கவனத்திற் கொள்க.

புஷ்பகுமார விதானகே
செயலாளர்
கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபை

**மதிப்பீட்டிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நூல்களைப் பொறுப்பேற்கும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறை ஒழுங்குகள்**

1. சமர்ப்பிக்கப்படும் புத்தகங்கள் தொடர்பான விண்ணப்பப்படிவம் எழுத்தாளரினால் ஒப்பமிடப்பட வேண்டும். உரிய புத்தகத்தின் உரிமை வெளியீட்டாளருக்கு வழங்கப்பட்டிருப்பின் வெளியீட்டாளர் ஒப்பமிடலாம்.
2. சிறுவர் புத்தகம் ஒன்று குறைந்தபட்சம் 16 பக்கங்களைக் கொண்டிருக்க வேண்டும். சாதாரண புத்தகம் ஒன்று 49 பக்கங்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும். (யுனெஸ்கோ தரத்தின் படி)
3. மொழிபெயர்ப்பு எனில்
    I. முதல் புத்தக பிரதியொன்றினை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
    II. மொழி பெயர்ப்பிற்காகப் பெறப்பட்ட எழுத்துமூல அனுமதி கொண்ட பிரதியொன்றினை சமர்ப்பிக்க வேண்டும்.
4. மதிப்பாய்வு அறிக்கை ஆசிரியருக்கு வழங்கப்பட மாட்டாது எனினும், திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அனுமதி பத்திரம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்படும் புத்தகங்களுக்காக உத்தேச திருத்தங்கள் என்ன என்பதனை மதிப்பாய்வு அறிக்கைக்கு அமைவாக காட்டப்படும்.
5. மதிப்பாய்வாளர்களின பெயர் வெளியிடப்பட மாட்டாது.
6. அனுமதி பத்திரம் நிராகரிக்கப்படும் புத்தகங்கள் தொடர்பான மேன்முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
7. அனுமதி பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் சகல கையெழுத்துப் பிரதிகள் கணினி மயப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
8. கையெழுத்துப் பிரதிகள் அனுமதி பத்திரம் வழங்குவதற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
9. சமர்ப்பிக்கப்படும் புத்தகங்கள் தொடர்பாக முடிவெடுப்பதற்கு செல்லும் காலம்.
   பொதுவாக ஒரு புத்தகத்திற்கு அனுமதி வழங்கப்படுவதற்கு மாதம் 1 இல் இருந்து 2 வரையிலான காலம் தேவைப்படும் என்பதனை கவனத்திற் கொள்ள வேண்டும்.

**முக்கியமானது**

- 18 வயதுக்கு குறைவான பிள்ளைகளினால் எழுதப்பட்ட புத்தகங்கள் அனுமதிக்காக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் பாடசாலை பாட பரிந்துரைகளுக்கு அமைவாக வெளியிடப்படும் புத்தகங்களுக்கு இணைவாக எழுதப்பட்ட புத்தகங்கள் நூலக அனுமதி பத்திரம் வழங்குவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- ஆரம்ப மற்றும் இடைநிலை கல்விக்குரிய இதுவரை பாடசாலை நூலக அனுமதி பத்திரம் பெறப்படாத மேலதிக வாசிப்புக்குரிய புத்தகங்கள் தொடர்பாக அனுமதி பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்கலாம்.

**மேற்படி விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டு**

- முறையான தரங்களைக் கொண்ட அச்சிடப்பட்ட புத்தகங்கள் மதிப்பாய்விற்காக சமர்ப்பிக்கலாம்.
- அச்சிடுவதற்கு எதிர்பார்க்கப்படும் கையெழுத்து பிரதிகளை சமர்ப்பித்தல் மிகவும் உகந்ததாகும்.